ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2022) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1-35

(ஒ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2022), மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [2022 மே 10

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2022)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். விவசாயத்திற்கும் உங்களுக்கும் என்ன தம்பி இருக்கிறது?

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971 வேளாண்மைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டத்தை, நம்முடைய துணை வேந்தர்களை, நம்முடைய தமிழக அரசே நியமனம் செய்வதற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற, இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவை தமிழக வாழ்வுரிமை கட்சியின் சார்பாக மனதார வரவேற்கிறேன். நாடு முழுவதும் 72 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. அவற்றில் 69 பல்கலைக்கழகங்களில் 62 வயது வரை பேராசிரியர் பெருமக்கள் பணியில் இருக்கலாம் என்கிற விதிகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வரவேற்புக்கு விளக்கமா?

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையை முடித்துவிடுகிறேன். ஆதலால், 3 பல்கலைக்கழகங்களில்தான் இந்தியாவிலேயே அது நடைமுறையில் இல்லை. அதில், நமது தமிழ்நாடும் ஒன்று. பெரும்பாலும் பேராசிரியர் பெருமக்கள் 49 வயதிற்குப் பிறகுதான் பணிக்கு வருகிறார்கள். குறுகிய காலத்திலே விடைபெற்றுக்கொள்கிறார்கள். ஆதலால், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்வார்களா என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக, மாண்புமிகு அவை முன்னவர், மாண்புமிகு நிதியமைச்சர் ஆகியோரிடம் நேற்றையதினம் நான் பேசுவதற்கு முன்பாக, சட்டமன்றத்தில் பேசுகின்றபோது, சில கோரிக்கைகளை முன்வைத்தேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் மாண்புமிகு

@ 10–5–2022 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2022 மே 10] [திரு. தி. வேல்முருகன்]

முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, கண்டிப்பாக சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்று சொன்னார்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் வைத்த கோரிக்கைகளை, எடுத்துச் சென்றார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உரையாற்றியது போதும்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறை மானியத்தில் மிகச் சிறப்பாகப் பதிலளித்து பேசினார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது சட்டமுன்வடிவில் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்கிருந்தாலும் கேட்டுக்கொண்டுதான் இருப்பார்கள். நீங்கள், இப்போது இதைப் பதிவு செய்துவிட்டீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *எடுத்துச் சென்றோம்; எடுத்துச் சென்றோம். அவ்வளவுதான். (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், சில. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. அவர் அதை வரவேற்றுவிட்டார்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *சரி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதில் ஒன்றும் பிரச்சினையில்லை. (குறுக்கீடு) கொஞ்சம் உட்காருங்கள். மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2022) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஓ) தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2022 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2022), மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2022 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2022)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

@ 7–5–2022 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY